# செங்கல்பட்டு நகராட்சி

## அவசரக் கூட்டம்

**2020ம் ஆண்டு ஜுன் மாதம் 09ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

செங்கல்பட்டு நகராட்சியில் 2020–2021–ல் நிதியாண்டிற்கான TURIP தமிழ்நாடு நகர்புற சாலைப் பணிகள் கீழ்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அங்கீகாரத்திற்கும் திட்ட ஒதுக்கீடு தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை இலட்சம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.7 கைலாச நாதர் கோயில் தெரு,வார்டு எண்.32 அளகேச நகர், வார்டு எண்.30 பழைய GST Road மற்றும் தொடர்ச்சி, குறிஞ்சி தெரு, வார்டு எண்.33 அண்ணா நகர் 6th மற்றும் 10th cross | ரூ.200.00 |

அ.கு–

1. மன்றம் அங்கீகரிக்கலாம்

2. திட்ட ஒதுக்கிட்டிற்கு மேல் கூடுதலாகும் தொகை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1085 நாள் 09.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்,
செங்கல்பட்டு நகராட்சி

# செங்கல்பட்டு நகராட்சி

## <u>அவசரக் கூட்டம்</u>

### <u>2020ம் ஆண்டு ஜுன் மாதம் 19ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.</u>

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சியில் பழவேலி பகுதியில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள நவீன தகன மேடை கட்டப்பட்டது முதல் பயன்படுத்தாமல் பெரும்பாலான பொருட்கள் மட்டுமல்லாமல் இருக்கும் பொருட்களும் துருப்பிடித்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. தற்போது கொரோனா நோயினால் (Covid-19) பாதிக்கப்பட்டு இறக்கும் நோயாளிகளை உடனுக்குடன் தகனம் செய்யப்பட வேண்டிய நிலை உள்ளதாலும் இங்கு நிகமும் இறப்பை தகனம் செய்ய இத்தகன மேடையை சீரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு நகராட்சியின் பொது நிதியில் மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றப் பொருள் வைக்க அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1086 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சியில் கீழ்கண்ட விவரப்படியான பணியினை மேற்கொள்ள 19.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி பழவேலி நவீன எரிவாயு தகன மேடை பழுது பார்ப்பு பணி | 20.00 | M/s.MHT Engineering, Ekkattthangal, Ch-32 | 0.62% குறைவு |
| | | | M/s Yes Yes JEE Engineering Ayanavaram,Ch-23 | 4.62% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாவட்ட தலைநகரமான இந்நகராட்சி பகுதியில் உள்ள மாவட்ட அரசு மருத்துவமனையில் ஏற்படும் கொரோனா நோய் (COVID-19) இறப்பினை உடனுக்குடன் எரியூட்ட வேண்டிள்ளதன் அவசர அவசியம் கருதி மேற்கண்ட குறைவு ஒப்பந்தபுள்ளிதாரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணிவுத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1087 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்—3

செங்கல்பட்டு நகராட்சியில் வருடம் தோரும் பணியாளர்களின் ஊதியத்தில் இருந்து வரி தொகையையும், ஒப்பந்ததாராரிடம் இருந்து பிடித்தம் செய்யப்படும் தொகைக்கு பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் GST செலுத்தப்பட்டு வருகிறது. "(Return File)"

இந்த பணியினை "Challanger consultancy" சர்வீஸ் சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதால் ஆகஸ்ட்டு—2019 முதல் மார்ச்—2020 வரை நிர்வாக அவசர அவசியத்தி நிமித்தம் செலுத்தப்பட்ட ரூ.28,000/— க்கு மன்றத்தின் அனுமதியும், மற்றும் 2020—2021—ம் ஆண்டிற்க்கு "Return File" மேற்படி நிறுவனத்தின் மூலம், இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு—

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1088 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்—4

பொது சுகாதாரம் செங்கல்பட்டு நகராட்சி "கொரோனா வைரஸ் நோய்" தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.1714/பி1/2020

நாள்.4.3.2020, மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசாணை நிலை எண்.47 நாள்.15.03.2020 மற்றும் அரசாணை நிலை எண்.152 நாள்.23.3.2020, அரசாணை நிலை எண்.347 நாள்.16.03.2020, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்தி(பத்திரிக்கை செய்தி) நாள் 16.03.2020 வருவாய் (நிர்வாகம்) பேரிடர் மேலாண்மை ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஒ.சி. 1/563/20 நாள் 19.03.2020 நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் கடிதம் ந.க.எண்.5437/ஜெ2/20 நாள் 23.3.2020, தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்திரவின் படி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2582/2020/மே மே நாள் 23.3.2020 உத்திரவுகள் இதர தொடர்பு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டம் நாள் 18.03.2020 மற்றுடத நேராய்வுகளின் படி வழங்கப்பட்ட உத்திரவுகளின் கீழ் செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் RTO, RDO, Collector, Fire Service, Transport Depot, Bus Stands, Markets, Banks, ATMs School, Govt/Private, Public Gathering Places, Transport Main Road, Slums போன்ற பகுதிகளில் தொடர்ந்து **"கொரோனா வைரஸ் நோய்"** ஏற்படாமல் தடுக்கும்அதிகமா 20 நபர்களை கொண்ட குழுக்கள் அமைத்து தொடர்ந்து மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை அனைத்து மக்கள் கூடும் இடங்களில் Lysol 2.5% கிருமி நாசினிகள் மற்றும் 1% & 4% Hypocholoride Solution தொடர்ந்து தெளிக்கும் விதமாக வரப்பெற்ற மேற்கண்ட அரசு துறைகளின் உத்திரவுகளின் படி இந்நகராட்சி பகுதியில் மாவட்ட தலைநகரம் என்பதால் வெளி கிராமங்களின் தலைமையிடமாக இருப்பதால் மக்கள் நெருக்கடி உள்ள நகரமாக உள்ளது. எனவே, **"கொரோனா வைரஸ் நோய்"** தொற்று ஏற்படாதவாறு நாளொன்றுக்கு 4 முறை கிருமி நாசினிகள் தொடர்ந்து மக்கள் நலன் காத்திட ஏதுவாக கீழ்கண்ட கிருமி நாசினிகள் மற்றும் Sprayer உயிர் காக்கும் சாதனங்கள் போன்றவை வாங்கி வழங்கிட தோராய செலவின மதீப்பிடு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | Lysol 5% | 3400 Ltr |
| 2 | Hand Sanitizer | 285 Ltr |
| 3 | Mask | 7680 Nos |
| 4 | Over Coats | 193 Nos |
| 5 | Gum Boots | 170 Nos |
| 6 | Sprayers(1 Ltr) | 10 Nos |
| 7 | Soap | 1000 Nos |
| 8 | Reflective Jackets | 200 Nos |

மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் கிருமி நாசினிகள் சப்ளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரிய வகையில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்

பார்வைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததார் மூலம் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | திரு.கே. ராமதாஸ், தாம்பரம், சென்னை 45 | மெஸ்ஸர்ஸ் எஸ்.சுமதி எண்டபிரைசஸ், 326,ஜிஎஸ்டி ரோடு, கடபேரி, சென்னை 45. | மெஸ்ஸர்ஸ் பிக் பாக்ஸ் இன்ஜினியரிங் தாம்பரம், சென்னை 45. |
| 1 | Lysol 5% | 210 | 285 | 290 |
| 2 | Hand Sanitizer | 1950 | 2600 | 2650 |
| 3 | Mask | 15 | 17 | 19 |
| 4 | Over Coats | 1050 | 1075 | 1080 |
| 5 | Gum Boots | 280 | 290 | 300 |
| 6 | Sprayers(1 Ltr) | 300 | 310 | 320 |
| 7 | Soap | 10 | 12 | 15 |
| 8 | Reflective Jackets | 150 | 160 | 165 |

அ.கு

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி பிரிவு 15ன் கீழ் உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.1089 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு “கொரோனா வைரஸ்” தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.01/சிஎஸ்/2020 நாள்15.03.2020 மற்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 15.03.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின்ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் நகராட்சி பகுதியில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேருந்து

நிறுத்தங்கள், கோவில்கள், மசூதிகள், சர்ச்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கூடங்கள், சமுதாய பொது கழிப்பிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாய விலை அங்காடி கட்டிடங்கள், வங்கிகள், வங்கி ஏடிஎம்கள், மக்கள் அதிகம் கூடும் சாலைகள், மின் துறை அலுவலகங்கள், அஞ்சல் அலுவலகங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை கிருமி நாசினிகள் தெளித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதன் பேரில் உரிய பாதுகாப்பு கவசங்களுடன் வேண்டிய மருந்துகள், கிருமி நாசினிகள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியின் 11வது வார்டு எல்லைக்குட்பட்ட சுந்தர விநாயகர் தெரு, வேதப்பர் தெரு மற்றும் சுண்ணாம்புக்கார தெரு ஆகிய தெருக்களில் உள்ள ஒரு சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக கண்டறியப்பட்டது. அப்பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அப்பகுதிகளில் நாள்தோறும் ஐந்து முறை கிருமி நாசினிகள் கொண்டு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மத்திய மற்றும் மாநில அரசின் தடை(ஊரடங்கு) உத்திரவு காலம் நீட்டிக்கப்பட்டு உள்ளதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் ஆகியோரால் இந்நகராட்சியின் மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள அறிவுறுத்தியதன் பேரில் கூடுதலாக கிழ்காணும் நோய் தடுப்பு கிருமி நாசினிகள் மற்றும் தளவாடங்கள் வாங்கிட உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. இப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தோராய செலவின மதிப்பீடு ரூ.7.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | விவரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | Mask | 30000 Nos |
| 2 | Single Use Gloves | 4000 Nos |
| 3 | Safety Glass | 200 Nos |
| 4 | Reusable Gloves | 400 Nos |
| 5 | Hypochloride Liquid | 2000 Kgs |
| 6 | Lyzol | 1200 Ltrs |
| 7 | PPE Kit(Single Use) | 200 Nos |
| 8 | Bleaching Powder | 1000 Kgs |
| 9 | Lime Powder | 3000 Kgs |

மேலும் இப்பணிகளை 144 தடை உத்திரவு காலத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் கிருமி நாசினிகள் சப்ளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரிய வகையில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததார் மூலம் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | திரு.கே. ராமதாஸ், தாம்பரம், சென்னை 45 | மெஸ்ஸர்ஸ் எஸ்.சுமதி எண்டபிரைசஸ், 326,ஜிஎஸ்டி ரோடு, கடபேரி, சென்னை 45. | மெஸ்ஸர்ஸ் பிக் பாக்ஸ் இன்ஜினியரிங் தாம்பரம், சென்னை 45. |
| 1 | Mask 1 No | 12 | 13.50 | 14 |
| 2 | Single Use Gloves 1 No | 4.50 | 5.50 | 6 |
| 3 | Safety Glass 1 No | 110 | 112 | 115 |
| 4 | Reusable Gloves 1 No | 40 | 42 | 45 |
| 5 | Hypochloride Liquid 1 Kg | 15 | 16.50 | 17 |
| 6 | Lyzol 1 Ltr | 120 | 125 | 128 |
| 7 | PPE Kit(Single Use) 1 No | 200 | 225 | 250 |
| 8 | Bleaching Powder 1Kg | 47 | 48 | 50 |
| 9 | Lime Powder 1 Kg | 10 | 11 | 11.50 |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

அ.கு–

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி பிரிவு 15ன் கீழ் உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.1090 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–6

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தாக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி அனைத்து பகுதிகளிலும் 70 DBC பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி(Disinfectant Solution) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் 70 DBC பணியாளர்களை வெளி கொணர்வின் மூலம் தனியார் வசம் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நகரில் நோய் பரவாமல் இருக்க இப்பணியாளர்களின் பணி மிக முக்கியம் வாய்ந்த பணி என்பதாலும், அத்தியாவசிய பணி என்பதாலும் இவர்களை மேலும் இப்பணிக்கு பயன்படுத்த வேண்டி திரு.K.ராஜ கோபால் ஒப்பந்ததாரருக்கு ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி உத்திரவு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 70 DBC பணியாளர்களுக்கு 1 மாதத்திற்கு உள்ள காலங்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஆகியவற்றிற்கு செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1091 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–7

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தாக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டி அனைத்து பகுதிகளிலும் 70 DBC பணியாளர்களை கொண்டு கிருமி நாசினி(Disinfectant Solution) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் 70 DBC பணியாளர்களை வெளி கொணர்வின் மூலம் தனியார் வசம் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்நகரில் நோய் பரவாமல் இருக்க இப்பணியாளர்களின் பணி மிக முக்கியம் வாய்ந்த பணி என்பதாலும், அத்தியாவசிய பணி என்பதாலும் இவர்களை மேலும் இப்பணிக்கு பயன்படுத்த வேண்டி திரு.K.ராஜ கோபால் ஒப்பந்ததாரருக்கு ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விலை விகிதத்தின்படி பணி உத்திரவு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 70 DBC பணியாளர்களுக்கு 1 மாதத்திற்கு 11.06.2020 முதல் 10.07.2020 முடிய உள்ள காலங்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஆகியவற்றிற்கு செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1092 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

பொருள்–8

செங்கல்பட்டு நகராட்சியில் 2019–20–ம் நிதியாண்டின் 14–வது நிதிக் குழு மாண்ய நிதி (14$^{th}$ CFC) திட்டத்தின் கீழ் ரூ.240.00 இலட்சத்திற்கு எட்டு பணிகள் செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண்.999 மற்றும் 1000 நாள்.06.01.2020 ன் படி பணிகள் தேர்வு செய்யப்பட்டு இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.7/இ/2020, நாள்.08.01.2020 ன் படி 28.01.2020 அன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதன் படி குறைவு ஒப்பந்தபுள்ளி தாரருக்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7/2020/இ1, நாள்.04.02.2020 ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இதில் மேற்கண்ட நகர்மன்ற தீர்மானம் எண்.999 நாள்.06.01.2020 ன் படி வரிசை எண்.2–ல் வார்டு எண்.4–ல் பாசித் தெரு தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.22.00 இலட்சத்திற்கு மதிப்பீடு

தயாரிக்கப்பட்டது. இக்சாலை மழைக்காலங்களில் மழைநீர் தேக்கமடைந்து பொது மக்கள் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராக இருந்ததை தள ஆய்வு செய்த போது நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளரின் அறிவுரைக்கேற்ப GSB மற்றும் Wetmix கொண்டு சாலையை உயர்த்தி அமைக்கும் வண்ணம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

தற்போது பணி செய்ய ஆரம்பிக்கும் போது இப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் இச்சாலையை உயர்த்தி அமைத்தால் வீடு மிகவும் தாழ்வாக ஆகிவிடும் எனவே சாலையினை மேலும் உயர்தாமல் தார் தளம் மட்டும் அமைக்குமாறு கேட்டுக்கொண்டதால், இம்மதிப்பீட்டில் உள்ளவாறு JCK நகர் ஒரு பகுதி மட்டும் உயர்த்தி செய்யவும் வார்டு எண்.4 பாசித் தெரு–வில் பழுதடைந்த பகுதி பழுது பார்த்து (B.T.patch work) செய்து தார் தளம் அமைக்கவும் இதன் தொடர் சாலையான பாசித் தெரு விரிவு பகுதி, பார்த்தசாரதி தெரு மற்றும் GST சாலையை இணைக்கும் சாலையும் பழுது பார்த்து தார்தளம் மட்டும் அமைக்க (B.M and SDPC) அனுமதிக்காக

மேலும் இம்மாறுதல் செய்வதால் இனவாரி மாறுதல் ஆனாலும் திட்ட மதிப்பீடு தொகைக்குள் பணி செய்வதால் இம்மாறுதல் செய்து பணி செய்ய அனுமதிக்காக.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி செய்ததை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1093 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்,
செங்கல்பட்டு நகராட்சி